<table>
<tr><td colspan="2">DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai</td></tr>
<tr><td colspan="2">Date: 30.07.2026</td></tr>
<tr><td colspan="2">CC No. 159/2026</td></tr>
<tr><td colspan="2">சாட்சி :PW6</td></tr>
<tr><td>பெயர் : திரு. ஜெரோம்ஆதீஸ்</td><td>ஜாதி :</td></tr>
<tr><td>த/பெ/க/பெ. : திரு. கென்னடிதாஸ்</td><td>தொழில் : கல்லூரி மாணவன்</td></tr>
<tr><td>கிராமம் : செம்மேட்டுப்பட்டி</td><td>சமயம் :</td></tr>
<tr><td>தாலுக்கா :</td><td>வயது : /2026</td></tr>
<tr><td colspan="2">( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்)</td></tr>
</table>

-------------------------------------------------------------

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 மெர்சன் எனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். 12.07.2025 ம் தேதியன்று இரவு 09.30 மணிக்கு மெர்சன் கடையை பூட்டிவிட்டு சென்றார். அதன்பின்னர் மறுநாள் காலை 13.07.2025 ம் தேதியன்று காலை சுமார் 07.30 மணிக்கு எனக்கு மெர்சன் நேரில் அவரது கடையில் ஓட்டை உடைக்கப்பட்டு எனது கடையிலிருந்த பணம் ரூ. சுமார் 15,000/- க்கு மேல் திருடுபோய்விட்டது என்று சொன்னார். நேரில் சென்று பார்த்த போது கடையில் பூட்டுகள் உடைக்கப்பட்டு இருந்தன. இது தொடர்பாக மெர்சன் புகார் கொடுத்தார். அதன்பின்னர் போலீசார் கடையிலிருந்த கேமராவை பார்த்த போது இரவு 01.00 மணியளவில் ஆஸ்பெட்டாஸ் சீட்டை உடைத்து ஒரு நபர் கடையின் உள்ளே இறங்கி கல்லாபெட்டியை உடைத்தது தெரியவந்தது. ஆஜர் எதிரிதான் கடையில் திருடிய நபர் ஆவார். திருடியதை கேமராவில் பதிவாகியிருந்தது, நான் பார்த்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

2. நான் திருச்சி செஞ்ஜோசப் கல்லூரியில் படித்து வருகிறேன். கல்லூரிக்கு நான் காலை 06.00 மணிக்கு எல்லாம் சென்றுவிடுவேன். அ.சா.1 என்னிடம் ரூ. 15,000/- மேல், ரூ. 20,000/- வரை காணாமல் போனதாக என்னிடம் சொன்னார். அ.சா.1 தான் என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்துள்ளார் என்றால் சரிதான். எனது பெரியப்பா பையன் கடை அருள்ராஜ் என்பவரின் கடை அருகில் உள்ளது. அவர் கார்மெக்கானிக்கடை வைத்துள்ளார். 13.07.2025 என்பது என்ன கிழமை என்று எனக்கு தெரியுமா என்றால் ஞாயிற்றுக்கிழமை.

நான் மெர்சனுடன் காவல்நிலையம் செல்லவில்லை, ஆனால் போலீசார் மேற்படி சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். மெர்சன் சம்பவம் பற்றி அன்றே புகார் கொடுத்தாரா என்றால் தகவல் சொன்னார், ஆனால் வழக்கு பதிவு செய்தார்களா என்பது பற்றி எனக்கு தெரியாது. அந்த கடையில் வேறு பொருள் ஏதும்காணாமல் போனதாக புகாரில் கொடுக்கப்பட்டிருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மெர்சன் சொல்லித்தான் மேற்படி சம்பவம் எனக்கு மெர்சன் சொல்லித்தான் தெரியும். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 30.07.2026 | |
| CC No. 159/2026 | |
| சாட்சி :PW7 | |
| பெயர் : திரு. தனேஷ் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. ராஜகுரு | தொழில் : காவல் உதவி ஆய்வாளர் |
| கிராமம் : புத்தாநத்தம் | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 30/2026 |
| ( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

---

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் தற்போது புத்தாநத்தம் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் துவரங்குறிச்சி காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன்.

கடந்த 12.12.2025 அன்று பகல் 04.00 மணிக்கு நான் துவரங்குறிச்சி காவல்நிலையத்தில் நிலைய அலுவலில் இருந்த போது செம்மேட்டுப்பட்டியை சேர்ந்த மெர்சன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் அடிப்படையில் துவரங்குறிச்சி காவல் நிலைய குற்ற எண். 589/2025 u/s.331(4),305 BNS ன் படி வழக்கு பதிவு செய்தேன்.

தொடர்ந்து நான் இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் மாலை 05.00 மணியளவில் சம்பவ இடமான துவரங்குறிச்சியில் உள்ள மெர்வின் இஞ்சினியரிங் ஒர்க்சாப் சென்று பார்வையிட்டு பட்டியல் சாட்சிகள் மெர்சன், அகமத்கபீர், ஜெடோன்ஆதீஸ் வரையிலான உள்ளிட்ட சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தொடர்ந்து சம்பவஇடத்தில் சாட்சிகள் சொக்கலிங்கம், மலைச்சாமி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

மேற்படி சாட்சிகள் மற்றும் புலன் விசாரணை அடிப்படையில் எதிரி மீதான குற்றம் உண்மை என தெரியவந்ததால் எதிரியை கைது செய்ய தேடிய போது

எதிரி குமார் என்கிற சோனிக்குமாரை என்பவரை 25.01.2026 அன்று காலை 05.00 மணிக்கு நான் போலீஸ்பார்டி சகிதமாக துவரங்குறிச்சி நத்தம் பிரிவு சாலை அருகே உள்ள MRF Tyres கடை அருகே சந்தேப்படும் படி இருந்த ஆஜர் எதிரியை பிடித்து விசாரித்ததில் அவர் தானாக முன்வந்து சாட்சிகள் வெங்கடேஷ், திவாகர், ஆகியோர்கள் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுத்தார். அதனை நான் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி துவரங்குறிச்சியில் உள்ள ஒரு ஆஸ்பத்திரிஅருகே உள்ள இஞ்சினியரிங் ஓர்க்சாப் கடைகளை உடைத்து அதிலிருந்த பணத்தை எடுத்துக்கொண்டு மதுரை சென்றதாகவும் இதே போல் டிசம்பர் மாதம் இறுதியில் துவரங்குறிச்சி பேருந்து நிறுத்தம் அருகேயுள்ள செல்போன் கடையின் மேற்கூரையை இடித்து பணம் ரூ.60,000/- திருடியதாகவும் கூறியதையும், அதே போல் அங்கு திருடுவதற்காக வந்து கடைகளை நோட்டமிட்டதாகவும் தான் திடிய பணத்தை ரெங்கநாதன் என்பவரின் வீட்டின் பின்புறம் மறைத்து வைத்திருப்பதாகவும் தன்னுடன் வந்தால் மேற்படி மறைத்து வைத்திருக்கும் பணத்தை எடுத்து தருவதாக வாக்குமூலம் அளித்தார். அதனை நான் பதிவு செய்து எதிரி மற்றும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். தொடர்ந்து மேற்படி சாட்சிகள் முன்னிலையில் எதிரி அன்றைய தினம் காலை 09.00 மணியளவில் புதுவாடியை சேர்ந்த ரெங்கநாதன் என்பவரின் வீட்டுஅருகே ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஆஜர் எதிரி ஆஜர் செய்த ரூ.14,500/- ரூ. 60,000/- உள்ளிட்ட பணத்தை எதிரி ஆஜர் செய்ய அவற்றை நான் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். மேற்படி சாட்சிகளிடம் கைப்பற்றுதல் மகசரில் கையொப்பம் பெற்றேன். சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கைது செய்யப்பட்ட எதிரியை காரணம் கூறி கைது செய்து வழக்கு சொத்துக்கள் மற்றும் எதிரியை நிலையம் வந்து பாராவசம் ஒப்படைத்து தக்க வழிக்கால் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். வழக்கு சொத்தினை படிவம் -91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன்.

2. இவ்வாறாக புலன் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக 03.03.2026 அன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். **முதல் தகவல் அறிக்கை, மாதிரி வரைபடம், படிவம் -91, முறையே அ.சா.ஆ. 8 முதல் 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தை நான் தான் பதிவுசெய்தேன். என்னிடம் காட்டப்படும் ரூ.14,500/- பணத்தை எதிரியிடமிருந்து சாட்சிகள் முன்னிலையில் நான் கைப்பற்றினேன்.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

3. இந்த வழக்கில் சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதி 12.07.2025 என்றால் சரிதான். புகார் கொடுக்கப்பட்டது 12.12.2025 ம் தேதி என்றால் சரிதான். நான் புகாரை பெற்ற பின்னர் தான் சம்பவ இடம் சென்றேன் என்றால் முன்பாகவே

சென்றுவிட்டேன். எப்போது சென்றேன் என்றால் ஏழாவது மாதமே சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டேன். அன்று புகார்தாரரை விசாரித்து புகார் ஏதும் பெறவில்லை என்றால் சரிதான். இழப்பீடு குறைவாக இருந்ததால் அவர் புகார் கொடுக்க விரும்பவில்லை. மெர்வின் லெத் கடைக்கும், துவரங்குறிச்சி தீடர்நகருக்கும் எவ்வளவு தூரம் என்றால் ஒரு கி.மீ தூரம் இருக்கும். குற்ற எண்.589/2025 வழக்கில் உள்ள சொக்கலிங்கம் பார்வை மகசர், ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பமிட்ட திவாகர், வெங்கடேசன் ஆகியோரை தான் குற்ற எண். 21/2026 வழக்கிலும் அதே சாட்சியாக போட்டுள்ளேன் என்றால் சரிதான்.

4. அன்றைய தேதியில் என்னிடம் எத்தனை பேர் எத்தனை கடைகள் உடைக்கப்பட்டதாக புகார் கொடுத்தார்கள் என்றால் 3 கடைகள் உடைக்கப்பட்டதாக புகார் கொடுத்தார்கள். அதில் அகமது கபீர் என்பவரது கடையும் உண்டு என்றால் சரிதான். சின்னம்மாள் என்பவரது கடையும் உடைக்கப்பட்டதாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. கபீர் என்பவரது கடையில் உடைக்கப்பட்டு ரூ. 17,400/- காணாமல் போனதாக புகார் கொடுக்கப்பட்டது என்றும் சின்னம்மாள் கடையில் ரூ.20,000/- காணாமல் போனதாக புகார் கொடுக்கப்பட்டது என்றும் மூவருக்கும் சேர்த்து மெர்சன் கொடுத்த புகாரில் ரூ. 14,500/- மட்டும் வழக்கு பதிவு சொன்னதாக சாட்சி சொல்கிறார்கள் என்று சொன்னால் அது தவறு.

5. இந்தவழக்கில் கைப்பற்றியதாக சொல்லும் பொன்னமரவாதி, புதுவாடி ரெங்கநாதன் வீட்டிற்கு பின்புறம் என்று சொல்லியுள்ளதற்கு ரெங்கநாதனை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். ரெங்கநாதனை வேறு வழக்கில் ஏதும் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. குற்ற எண். 21/2026 ல் கைப்பற்றுதல் மகசரில் உள்ள சாட்சிகள் அவர்களின் உறவுக்காரர்கள் என்றால் மேற்படி வழக்கில் உட்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. புகாரில் எங்களது கடையில் சிசிடிவி பதிவு இருக்கிறது என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்தவரிடம் நகல் கொடுத்து கையெழுத்து பெறவில்லை என்றால் சரிதான்.

6. நான் எதிரியை கைப்பற்றி வைத்துக்கொண்டு தான் அ.சா.1 டம் புகார் பெற்றேன் என்றால் சரியல்ல. மேற்படி கட்டிடம் பில்டிங் உள்ள கட்டிடம் உள்ள என்றால் சரிதான். தொடர்ச்சியாக கடைகள் தான் உள்ளது. நான்கு வழிச்சாலைக்கு அருகில் உள்ள கடைகள் தான் என்றால் 500 மீ தொலைவில் நான்கு வழிச்சாலை உள்ளது. மேற்படி எதிரி 24.01.2026 ம் தேதி எதிரியை பிடித்தோமா என்றால் 25.01.2026 ம் தேதி பிடித்தோம். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் எதிரியை 24.01.2026 ம் தேதி பிடித்துவிட்டோம் என்றும் கைப்பற்றுதல் மகசருக்காக அழைத்து சென்று 25.01.2026 ம் தேதி நீதிமன்ற காவல் அடைப்பு செய்தோம் என்றால் சரிதான்.

7.பொதுவாக ஒரு சம்பவம் நடந்து எவ்வளவு நாட்கள் கழித்து புகார் பெறுவோம் என்றால் உண்மையாக இருக்கும் பட்சத்தில் எவ்வளவு நாட்கள் ஆனாலும் புகாரை பெற்றுக்கொள்வோம். அ.சா.1 புகாரை கொடுக்க விரும்பாத பட்சத்தில் உறவுக்காரர் கொடுத்தாக கூறினார். எதிரி எந்த பணமும் திருடவில்லை என்றும் அ.சா.1 கடையில் எந்த பணமும் திருடுபோகவில்லை என்றும் மேற்படி எதிரியிடமிருந்த பணத்தை கைப்பற்றி அ.சா.1 டம் ஒரு பொய்யான புகாரை பெற்று வழக்கு பதிவு செய்து அதற்கு குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் குற்ற சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும், நான் முறையாக விசாரணை செய்யாமல் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகள் யாரையும் விசாரிக்காமல் அனைத்து ஆவணங்களையும் நிலையத்தில் இருந்து தயார் செய்து எதிரிக்கு எதிராக ஒரு பொய்யாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.